பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 16 சனிக்கிழமை (31-07-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 245

# வட்டுக்கோட்டை, சித்தன்கேணியில் சுப்பசொனிக், புக்காரா குண்டுவீச்சு!

## மாணவன் பலி; 10 பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப்பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையின் 'சுப்ப சொனிக்' மற்றும் 'புக்காரா' விமானங்கள் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களில் மாணவன் ஒருவன் பலியானான். அப்பாவிப் பொதுமக்கள் பத்துப் பேர் காயமுற்றனர். பல வீடுகள் உட்பட ஏராளமான உடைமைகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை 10 மணிக்கு இப்பகுதிகளுக்கு மேலாக வட்டமிட்ட 'அவ்ரோ' விமானம் ஒன்று சுமார் 30 நிமிட நேரம் இப்பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது. அதன் பின்னர் மாலையில் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன.

மாலை 4-55 மணியளவில் வந்த இரு "சுப்பசொனிக்" விமானங்கள் திடீரென குத்திப் பதிந்து வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் இரண்டு குண்டுகளை அடுத்தடுத்து—பக்கம் பக்கமாக வீசிச் சென்றன. இதனால் அப்பகு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சால் பாரிய குழிகள்!

வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதிகளில் நேற்று சுப்பசொனிக், புக்காரா விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுகளால் பாரிய குழிகள் ஏற்பட்டன.

வட்டுக்கோட்டை மாவடியில் வீடு ஒன்றின் மேல் விழுந்த குண்டினால் அந்த வீட்டின் ஒரு பகுதி நிலத்தில் புதையுண்டு பெரும் கிடங்கு ஏற்பட்டது.

சுமார் ஐம்பது அடி விட்டமுடைய இக்கிடங்கின் மையப் பகுதி சுமார் 15 அடி ஆழம்வரை காணப்பட்டது.

இதே போன்ற கிடங்குகள் சித்தன்கேணிக் குண்டு வீச்சினாலும் ஏற்பட்டன.

## காயமுற்றோர் விவரம்

நேற்று மாலை வட்டுக்கோட்டை, சித்தன்கேணிப் பகுதிகளில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பத்துப் பேர் காயமுற்றனர் அவர்களது விவரம் வருமாறு:-

★ மாதவன் லலிதாம்பாள் (வயது 49)

★ லலிதாம்பாளின் மகள் ரேவமனோகரி (வயது 20)

★ கிருஷ்ணமூர்த்தி சுமித்திரா (வயது 14) - கொட்டைக்காடு

★ சிவசம்பு பொற்கொடி (வயது 55)

★ மாணிக்கம் செல்லத்துரை (வயது 50)

★ இராசநாயகம் சொர்ணாம்பிகை (வயது 46)

★ யசோதரன் சாந்தா (வயது 40)

★ யசோதரன் சாந்தாவின் மகன் சுந்தரராம் [வயது 2]

— இவர்கள் அனைவரும் வட்டுக்கோட்டை மாவடியில் காயமுற்றனர்.

★ எஸ். செல்வரட்ணம் [வயது 64]

★ வி. மலர்தேவி [வயது 31)

—இவர்கள் இருவரும் சித்தன்கேணிச் சம்பவத்தில் காயமுற்றனர். [உ-15]

மணலாற்றில் புலிகளிடம் தஞ்சமடைந்த

## 7 அப்பாவிச் சிங்களவர்கள் செஞ். குழுவிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

மணலாறில் மண்கிண்டி மலை இராணுவ முகாம் தகர்க்கப்பட்ட "இதய பூமி - 1" இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளிடம் தஞ்சம் அடைந்த ஏழு அப்பாவிச் சிங்கள மக்கள் நேற்று முன் தினம் முல்லைத்தீவில் வைத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் பாதுகாப்பாக ஒப்படைக்கப் பட்டனர்.

மேற்படி பாரிய தாக்குதல் நடவடிக்கையில் அகப்பட்டு சிக்கித்தவித்த இரண்டு பெண்கள், இரண்டு குழந்தைகள் உட்பட ஏழு அப்பாவி சிங்கள மக்கள் விடுதலைப் புலிகளிடம் தஞ்சமடைந்தனர்.

புலிகள் அவர்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்தி காப்பாற்றி நன்கு

(6ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் அஸ்தியுர் கையளிப்பு

மணிலா, ஜூலை 31

மணலாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின் போது பலியான படையினரில் 18 பேரின் அஸ்திகளை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகளிடம் விடுதலைப் புலிகள் கையளித்ததாக இராணுவ அதிகாரிகளை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி அறிவித்தது. (உ-எ)

## மன்னாரில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 31

மன்னார் ஜீவநகர் விவசாய பண்ணை மீது சியாமாசெட்டி ர பொம்மர்கள் நேற்று முன் தினம் மாலை 4.40 மணியளவில் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தின. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (உ-3)

## தொடர்ந்து 2 ஆம் நாள் கைதிகள் உண்ணாவிரதம்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகள் இன்று இரண்டாவது நாளாக சாகும் வரையான உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தனர்.

நேற்று முன்தினம் காலை 10.50 மணியளவில் யுத்தக் கைதிகள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

முதல் ஐந்து தினங்கள் வரையே நீரருந்தி தாங்கள் உண்ணாவிரதத்தை தொடர்வர் என்றும்—

அதன் பின்னர் தாங்கள் நீர் கூட அருந்தப்போவதில்லை என்றும் யுத்தக் கைதிகள் தெரிவித்தனர். (உ-3)

ஆனையிறவுக் களத்தில் வீரமரணமடைந்த

## 599 வேங்கைகள், 3 துணைப் படை வீரர் நினைவு நிகழ்வு இன்று கொடிகாமத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 31

ஆனையிறவு ஆகாய, கடல், வெளி சமரில் வீரச்சாவடைந்த வேங்கைகளின் இரண்டாம் ஆண்டு நினைவுநாளும், நினைவாலயத் திறப்பு விழாவும் இன்று மாலை 5 மணிக்கு கொடிகாமம் கண்டி வீதியில் அமைந்துள்ள நினைவாலயத்தில் வெகு சிறப்பாக நடைபெறவிருக்கின்றன.

ஈகைச்சுடர் ஏற்றல், நினைவுக்கல் திறந்து வைத்தல், நினைவாலயம் திறந்து வைத்தல், உருவப் படங்களுக்கு மாலை சூட்டுதல், பெற்றோர் மலரிடுதல் ஆகியவற்றைத் தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு நினைவுக் கூட்டம் ஆரம்பமாகும்.

இறுதியாக கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

சிங்கள தேசத்தின் முப்படைகளையும் எதிர்த்து - விடுதலைப் புலிகள் மரபு வழி ராணுவமாக வளர்ந்துள்ளனர் என்பதை நிரூபிக்கும் வகையில்— ஆனையிறவுப்பகுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 1,800 தபால் பொதிகள் இன்று வந்து சேரும்

இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரவிருக்கும் "வாதுவ" கப்பலில் ஆயிரத்து 800 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ் தபாலக வட்டாரங்கள் நேற்று மாலை தெரிவித்தன.

தபால் பொதிகளை எடுத்து வர தபாலக ஊழியர்கள் இன்று காலை பருத்தித்துறைக்குச் செல்வர் என்றும்—

தபால்கள் தரம் பிரிக்கப்பட்டு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் விநியோகிக்கப்படும் என்றும் — யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-3-9)



இன்று திறக்கப்படும் நினைவாலயத்தின் படத்தையும், ஆனையிறவு இராணுவ முகாமின் தோற்றத்தையும் மேலே காணலாம்.

## கிளாலிச் சம்பவத்தில் மேலும் பலர் இறந்தனரா?

### பயணப் பொதிகளால் சந்தேகம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) அதிகாலை கிளாலிக் கடலில் படையினர் நடத்திய கொலை வெறியாட்டத்தில் மேலும் பலர் கொலையுண்டார்களா அல்லது படையினர் பிடித்துச் சென்றனரா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

வியாழக்கிழமைச் சம்பவத்தில் படையினரிடம் சிக்கிக்கொண்ட இரண்டு படகுகளில் இருந்து மீட்கப்பட்ட பயணப் பொதிகள் இந்தச் சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளன.

இரண்டு படகுகளில் இருந்து மீட்கப்பட்ட மொத்தம் பத்துப் பயணப் பொதிகள் கிளாலிக் கரை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்தன அவற்றில் இரண்டு அடையாளம் காணப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று துன்பளையைச் சேர்ந்த ராமு சிவஞானசுந்தரம் 54 வயது) என்பவருடையது என்று கண்டறியப்பட்டுள்ளது.

திரு. சிவஞானசுந்தரம் இம்மாதம் 21 ஆம் திகதி மரணமான தனது மனைவியின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்கென்று கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்தவராவார்.

அவரது பிரயாணப் பொதி கண்டெடுக்கப்பட்டதால் அவருக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் மனைவியின் மரணச்சடங்குகள் நேற்று நடைபெற்றன.

புத்தளையைச் சேர்ந்த மாப்பாணர் செல்வநாயகம் என்பவரது பிரயாணப் பொதியே அடையாளம் காணப்பட்ட இரண்டாவது பொதியாகும்.

அடையாளம் காணப்படாத எட்டுப் பொதிகள் இன்னமும் கிளாலிக் கரை அலுவலகத்தில் உள்ளன. (அ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். பகுதி தெங்கு பனம்பொருள் கூ. சங்கங்களின் கொத்தணி (மட்டு)

## கணக்கு இலிகிதர்

(உணவகம் - உற்பத்திச் சாலை)

## பதவி வெற்றிடம்

மேற்காண் பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி:- கணக்கு இலிகிதர் (உணவகம் - உற்பத்திசாலை)
குறி - இல - 302 : 8
சம்பளத் திட்டம்:- (10) 1005/- — 1705/- 40 x 5 : 50 x 10
அத்துடன் சங்கங்களினால் வழங்கப்படும் சகல படிகளும்.

தகைமை:- க. பொ. த. (உயர்தரம்) சித்தியுடன் 2 வருட கால சேவை அனுபவம் அல்லது க.பொ. த (சாதாரண தரம்) சித்தியுடன் 5 வருட கால சேவை அனுபவம்

வயது:- 7-8-93 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 07-08-93

விண்ணப்பங்களை நீங்களே சுய விவரங்களுடன் தயாரித்து "பொது முகாமையாளர்" — யாழ் பகுதி தெங்கு ப. பொ. கூ. ச. கொத்தணி, 370, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்குத் தபால் மூலம் அல்லது நேரில் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்

யாழ்.பகுதி தெ.ப.பொ.கூ.ச.
கொத்தணி (மட்டு)
யாழ்ப்பாணம்
30-7-93

[26742]

## MATHS CENTRE

NELLIADY

3ஆம் தவணைக்குரிய வகுப்புகள்

Yr. 6, 7, 8, 9, 10, 11

ஆரம்பம்: 31 – 7 – 1993

## MATHS CENTRE

NELLIADY

★ A/L – 94 (One Year Course)
★ A/L – 94 (Revision Class)

பௌதிகவியல் — திரு. சோதிலிங்கம்
இரசாயனவியல் — திரு. சிவசோதி
தூய பிரயோக கணிதம் — திரு. அருளானந்தம்

மிக விரைவில் ஆரம்பமாக உள்ளது. விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்.

(6390)

## NEW SCIENCE HALL

கன்னாதிட்டி. யாழ்ப்பாணம்.

### ★ 94 - A/L ★

துரித மீட்டல் வினா-விடை வகுப்புக்கள்

செவ்வாய்
3-00 — 5-00 தாவரவியல் — திரு. குணசீலன்
5-00 — 6-00 பௌதிகவியல் — திரு. கணேசன்

வியாழன்
3-00 — 5-00 இரசாயனவியல் — திரு. மணியம்
5-00 — 6-00 பௌதிகவியல் — திரு. கணேசன்

ஆரம்பம்: 3 – 8 – 1993
செவ்வாய் 3-0) மணி

(பி-5630)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி ஜெயந்தி ஜெயரட்ணம்

(உடுவில் மகளிர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவி)

மலர்வு: 20 – 10 – 1969
உதிர்வு: 31 – 07 – 1988

அன்புமகளே!
அருமைத்]தங்கையே!
நீண்டதோர் வாழ்வில்
நீ இருப்பாய் என்றிருந்தோம்
ஆண்டதோர் பத்தொன்பதில்
அகன்றேனோ சென்றாய்
ஆண்டு ஐந்து ஆனாலும்
ஆறாதம்மா மனக்கவலை
ஆண்டவனடியில் உன் ஆன்மா அமரட்டும்.

உமது பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, அண்ணன்மார்.

இராமலிங்கம் வீதி,
உடுவில்.

(6378)

## த. பொ. தேர்வு சான்றிதழ்

யாழ்ப்பாணம், ஜுலை 31 தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் 1992ஆம் ஆண்டில் தோற்றிய சகல மாணவர்களுக்குமான பெறுபேற்றுச் சான்றிதழ் சகல கல்விக் கோட்டங்களிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சகல அதிபர்களும் தங்கள் பாடசாலை மாணவர்களின் பெறுபேற்று சான்றிதழ்களைப் பெற்று வழங்குமாறு தேர்வுச் சபையினர் கேட்டுள்ளனர். (இ-162)

## இன்னமுந்தான் செல்வம் இங்குன்னைத் தேடுகிறோம்

மேற்படி தலைப்புடன் 1993 - 7 - 27ஆம் திகதிய உதயன் 8ஆம் பக்கத்தில் வெளிவந்த விளம்பரத்தில் —

அமரர் நடராஜா செல்வரெத்தினம் என்று அச்சாகியது தவறு.

திரு. நடராஜா செல்வரெத்தினம் என்று திருத்தி வாசிக்கவும்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் காணாமற்போன அவரைக் குடும்பத்தினர் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

## கலை நிகழ்ச்சி

யாழ் வர்த்தகர் சங்கம்
சங்க வளர்ச்சிக்காக நடத்தும்

## நிதியுதவி நிகழ்ச்சி

இடம்: இளம் கலைஞர் மண்டபம் - சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்: 07–08–93 சனிக்கிழமை
நேரம்: மாலை 3-30 மணி முதல் இரவு 2-00 மணிவரை.
மங்கள விளக்கேற்றல்: யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர்
பிரதம விருந்தினர்: புதுவை இரத்தினதுரை (கலை பண்பாட்டு கழக பொறுப்பாளர்)
சிறப்பு விருந்தினர்: திரு கொ. க. ஆ. க. நடராசா (முன்னாள் வர்த்தகர் சங்க தலைவர்)
திரு. பாலசிங்கம் (மாநகர சபை ஆணையாளர்)
திரு இ. வெங்கட்ராமன் (வர்த்தக வங்கி முகாமையாளர்)
திரு. த. கோவிந்தசாமி (வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாஜ தலைவர்)
பரத நாட்டியம்: செல்வன் எம். அருள்மோகன்
திருமதி சுகந்தினி தயாசிலன்

"சாந்தன்", "ராஜன்ஸ்"
குழுவினர் முதன் முறையாக
ஒரே மேடையில் இணைந்து வழங்கும்

### இன்னிசை கானங்கள்

31 - 07 – 93 நடைபெற வேண்டிய நிகழ்ச்சி
07 – 08 – 93 அன்று நடைபெறும்.

வே. சிற்சபேசன்
தலைவர்

நா. த. ஜன்னலிங்கம்
செயலாளர்

வாழ்த்துபவர்கள்;

சோபனா ஆடை அகம்
மதுரா சில்க்ஸ்
இல. 16, 75, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(26741)

## NEW SCIENCE ACADEMY ★ NEW SCIENCE HALL

KANNATHIDDY, JAFFNA.

எமது நிறுவன மாணவர்களுக்கென நடத்தப்பட்ட க. பொ. த. [உயர்தரம்] முன்னோடிப் பரீட்சை — ஜூலை 1993

### ❁ சிறப்புத் தேர்ச்சியடைந்த மாணவர் விவரம் ❁

**தாவரவியல்**
செல்வன் A. M. சுந்தரம்
செல்வன் K. வித்தியன்
செல்வன் R. பரிமளேந்திரன்
செல்வி K. கௌரி
செல்வி R. ராஜி
செல்வி K. மேனகா
செல்வி A. நிஷாந்தி

**பௌதிகவியல்**
செல்வன் S. சுஜிதரன்
செல்வன் J. ஜெயக்குமார்
செல்வன் K. வேலழகன்
செல்வி M. கேதீஸ்வரி
செல்வன் R. சபேசன்
செல்வன் A. ராகுலன்

**இரசாயனவியல்**
செல்வன் S. சுஜிதரன்
செல்வி K. மேனகா
செல்வன் K. பிரதீபன்
செல்வி K. புஸ்பமாலா
செல்வி S. செல்வகௌரி
செல்வி T. திருவரங்கஜனனி

**தூய கணிதம்**
செல்வன் S. சுஜிதரன்
செல்வன் G. சுரேன்
செல்வன் J. சிவானந்தன்
செல்வன் R. பிரதீபன்
செல்வன் M. அருள்தரன்

★ அனைத்துப் பாடங்களிலும் மிகக்கூடிய மொத்தப் புள்ளிகளைப் பெற்று பரிசில்கள் பெறும் மாணவர் விவரம்:

கணிதத்துறை: செல்வன் S. சுஜிதரன் இவருக்கு மாவீரன் லெப். சலீம் (ச. அரவிந்தன், கரணவாய்) ஞாபகார்த்த பரிசில் வழங்கப்படவுள்ளது.

உயிரியல்துறை: செல்வன் K. வித்தியன் இவருக்கு மாவீரன் லெப். மணிமாறன் (வை. ரமணானந்த சர்மா, கொக்குவில்) ஞாபகார்த்த பரிசில் வழங்கப்படவுள்ளது.

★ எதிர்வரும் பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் எம் நல்வாழ்த்துக்கள் ★

நிர்வாக, ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகஸ்தர்கள்

(இ-5540)

## CHEMISTRY

திரு. மகாதேவா B. Sc. (Dip. In Ed.)

சனி, ஞாயிறு

A/L 95
9.00

A/L 94
பிரிவு I 11.00
பிரிவு II 1.00

புதிய அனுமதி பெற விரும்புவோர் 31-07-93 இற்கு முன் பெற்றுக் கொள்ளுங்கள்.

BOND
யாழ்ப்பாணம்.
[26745]

## A/L CHEMISTRY

திரு. சிவசோதி B.Sc.
சனி, ஞாயிறு
8.00 பிரிவு I
9.00 பிரிவு II
(முழும்பாடத் திட்டமும் முதலிலிருந்து முற்றாக கற்பிக்கப்படும்)

ஆரம்பம்:
1 - 8 - 93

BOND
யாழ்ப்பாணம்.
(6392)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடம் பெயர்ந்தவர்களுக்கு ஜூலை மாத நிவாரணமும் பழைய உணவு முத்திரையில்

யாழ்ப்பாணம், ஜூலை 31
இடம்பெயர்ந்தோருக்கான ஜூலை மாத நிவாரண விநியோகத்தை ஜூன் மாதத்துக்கு வழங்கப்பட்ட முறைப்படி பழைய உணவுமுத்திரையில் வழங்குமாறு யாழ். அரச அதிபர். திரு. கா. மாணிக்கவாசகர் ப. நோ. கூ. சங்கங்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

புதிய உணவு முத்திரைகள் வந்து சேராததையடுத்தே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

ஜூலை மாதத்துக்கான நிவாரணத்துக்கு நாட்டு அரிசி, மா, சீனி, பருப்பு, தேயிலை, சவர்க்காரம் ஆகியன வழங்கப்படவிருக்கின்றன.

பால்மா வழங்கப்படமாட்டாது. (த-3)


**MATHS CENTRE**

ஆண்டு- 5 புலமைப் பரிசில் வகுப்பு
(1993 Aug.)

✶ பல ஆசிரியர்கள் சேர்ந்து மாதிரி வினாத் தாள் முறையில் போதிக்க உள்ளனர்.

ஆரம்பம்: 31-07-1993
சனி 2-15p. m. (6391)


## ஆலயங்களில்

குடத்தனைசம்பேதுருவானர் ஆலய திருநாள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இத் திருநாள் முடிவில் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் திருப்பலிப் பூசையை ஒப்புக் கொடுப்பார் (க-173)

o o o

கோப்பாய் வடக்கு பலாலை அம்மன் கோயில் வருடாந்த இரத உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும். (க-72)

o o o

சாவகச்சேரி டச்சு வீதி ஸ்ரீ பழனி ஆண்டவர் கோயில் வேல் பவனி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (க-117)

## மலர் வெளியீடு

யாழ். மாநகராட்சி மன்றத்தின் "நல்லைக் குமரன்" மலர் வெளியீட்டு விழா நேற்றுக் குறிப்பிட்டது போன்று இன்று சனிக்கிழமை நடைபெறமாட்டாதெனவும் அடுத்த சனிக்கிழமையே [07 – 08 – 1993] நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-162)

## கீழே கிடந்து எடுத்த பொருள் வெடித்தது

### மன்னாரில் சிறுவன் பலி

மன்னார் மாவட்டத்தில் ஸ்ரீலங்கா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் கவனிப்பாரற்றுக் கிடந்த பொருள் ஒன்றை எடுத்த சிறுவன் ஒருவன் அது வெடித்ததில் உயிரிழந்தான்.

மன்னாரில் உள்ள கள்ளிக்காடு தங்கன் குளப்பகுதியில் இச்சம்பவம் நடந்தது.

கவனிப்பாரற்றுக் கிடந்த டப்பி ஒன்றை மாடு மேய்த்துக்கொண்டிருந்த சிறுவர்கள் எடுத்து பார்த்தபோது அது வெடித்தது. இதனால் மாடு மேய்த்த சிறுவர்களுள் ஒருவரான 16 வயதுடைய புலேந்திரன் பலியானார். அவருடன் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இந்தப் பகுதியில் சில மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (இ-162)

## நான் பதவி நீடித்திருந்தால் யுத்தம் முடிவடைந்திருக்கும்

### இப்படிக் கூறுகிறார் ஜே. ஆர்.

கொழும்பு, ஜூலை 31
நிறைவேற்று ஜனாதிபதியாக நான் தொடர்ந்து பதவியில் இருந்திருந்தால் வடக்கு— கிழக்கு யுத்தம் இதுவரை முடிவடைந்திருக்கும்.

கொழும்பு சட்டக் கல்லூரியில் நடைபெற்ற மாதிரி நாடாளுமன்றக் கூட்டத்தில் "1978 அரசமைப்புச் சட்டம்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துகையில், முன்னாள் ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு வரவழைத்தது சரியான முடிவாக இருக்கலாம் அல்லது பிழையான முடிவாக இருக்கலாம்.

ஆனால் யுத்தம் முடிய முன்னர் அவர்களைத் திருப்பி அனுப்பியது மிகப் பெரிய தவறு.

இப்படி ஜே. ஆர் மேலும் கூறினார். (இ-6)


திக்கம்
மடத்து வாசல் சித்தி விநாயகர் ஆலய
**9ஆம் நாள் அலங்கார உற்சவம்**

இன்று (31-7-1993) சனிக்கிழமை மாலை 8மணி

✶ தெய்வீகத் தொடர் அருட்பேருரை
"வன்னிமந்தாரத்தின் பெருமை"
செல்வி குமுதினி தங்கவேல் B. A.

✶ பட்டிமண்டபம்
நடுவர்: இ. ஜெயராஜ்
(அமைப்பாளர், கம்பன் கழகம்)
பொருள்: 'வியத்தகு பெருந்தன்மை பெரிதும் வெளிப்படுவது வாலியிடமா? கர்ணனிடமா?'
கம்பன்கழக அங்கத்தவர்கள் பங்கு கொண்டு சிறப்பிப்பார்கள்.

✶ வில்லிசை
நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்

அனைத்து அடியார்களையும் அன்புடன் அழைக்கிறோம்.

- 9ஆம் நாள் விழா உபயகாரர்கள் -

(26783)



**விடுதி மேற்பார்வையாளர் தேவை**

10 வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளின் விடுதி மேற்பார்வையாளராக செயற்படுவதற்கென பெண்கள் தேவை.

கல்வித்தகைமை:- க.பொ.த. சாதாரணம் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.
வயதெல்லை:- 25 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
இடம்:- திருநெல்வேலி, மூத்ததம்பி வித்தியாலயம் அருகாமையில் உள்ள மகளிர் அலுவலகம்.
காலம்:- 04-08-1993 காலை 9மணிக்கு, நேரில் வரவும்.

(26789) — நிர்வாகம்.



**முதலாவது பிறந்த நாள் வாழ்த்து**



★ பிரசோபனன் ★
குருபரஞ்சோதிநாதன்

அராலி மேற்கைச் சேர்ந்த
குருபரஞ்சோதிநாதன் - மோகனராணி
தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசோபனன் இன்று (31 – 07 – 1993) தனது முதலாவது பிறந்த நாளை அராலியிலுள்ள தமது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை அப்பா (சுவிஸ்), அம்மா, அக்கா-பிரதாயினி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், பெரியப்பா (கொழும்பு), சித்தப்பா (ஜேர்மனி), அன்ரிமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், அண்ணா (ஜேர்மனி) மற்றும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் அம்பாள் அருள் பெற்று, பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.
(இ/5530)



**விக்னா**
கல்விநிறுவனம்

94
அலகு ரீதியான
வினா - விடை
மீட்டல்

ஆரம்பம்:
01 - 08 - 1993
9-00மணி

பொருளியல்—
திரு. கலாகரன்
1 - 00 — 2 - 30

வர்த்தகம்—
திரு. தேவா
10 - 00 — 11 - 00

கணக்கியல்—
திரு. S. K. பிரபாகரன்
2 - 00 — 4 - 00

அளவையியல்—
திரு. விக்கி
11 - 00 — 12 - 00

தமிழ்—
திரு. குழந்தை
10 - 00 — 11 - 00

இந்துநாகரிகம் - சமயம்—
திரு. காரைசுந்தரம்பிள்ளை
12 - 00 — 1 - 00

புவியியல்—
திரு. குணராசா
9 - 00 — 10 - 00

அரசியல்—
திரு. ஜெயகாந்தன்
9 - 00 — 10 - 00

வரலாறு—
திரு. சிறீதரன்
1 - 00 — 2 - 00
(சி/5536)



**A/L - 94**
தூய, பிரயோக கணிதம்
ஆசிரியர்
திரு. கிருஷ்ணர்
ஆரம்பம்
01 - 08 - 1993
(சனி / ஞாயிறு பி. ப 4 — 6 மணி)

**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்
(சி / 5537)



**வெளியீடுகள்**

எங்கள் மண்ணின் தயாரிப்பு!
சிறந்த கலைஞர்களின் பிரமிக்க வைக்கும் நடிப்பு!
பார்ப்பவர்களை
கண்ணீர் சிந்த வைக்கும் காட்சிகள்!

இத்தனையும் ஒருங்கிணைந்த
"இது எங்கள் தேசம்"
"தாயகக் கனவு"

வீடியோ படங்கள் உங்கள் வீடுகளை நோக்கி வந்துவிட்டன.

இன்றே உங்கள் வீடுகளில் பார்த்து மகிழுங்கள்.

மற்றும் குடும்பத்துடன் பார்த்து மகிழக்கூடிய வகையில் தணிக்கை செய்யப்பட்ட சிறந்த சினிமா படங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்!
"நியூவிக்ரேஸ்"
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(6389)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### அச்சுக்கோப்பாளர் தேவை

5 வருட அனுபவமுள்ள பக்கம் கட்டுபவர், பைன்டர், அச்சுக் கோப்பாளர் (பெண்) உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். ஏ. எஸ். ஜே. பிரின்டிங் வேக்ஸ், மல்லாகம். [26737]

### தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப்படும். தூண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

### விற்பனைக்கு

புதிய இரும்பு அலுமாரிகள் (Steel Cup Board) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: T தினேஸ், இல:38 தேவாலய வீதி, யாழ்ப்பாணம். (6380)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உரிய விடை உடனே கிடைக்கும். தினமும் காலை 8-30 — 12-30, பி.ப. 3-00 — 6-00. த. சிவானந்தன் பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு (26704)

### ஆங்கிலப் பரீட்சை

N. C. E. தேசிய ஆங்கில சான்றுப் பரீட்சைக்குரிய கடந்த கால வினாப்பத்திரங்கள் மாதிரி - வினா - விடைகட்டுரைகளுடன் அமைந்த வழிகாட்டி. மீண்டும் வெளிவந்துவிட்டது. தொகுப்பு: த. ந பஞ்சாட்சரம், விலை 70-00 ரூபா. கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம் புத்தக நிலையம், Science Hall கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். [சி-5636]

### ஆண்டு - 4 வகுப்பு

1994 ஆகஸ்ட் புலமைப்பரிசில் மாணவருக்கு (ஆண்டு-4) அடிப்படையில் இருந்து வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இணைய விரும்புவோர் விண்ணப்பிக்கவும். அனுமதிப் பரீட்சை 31-07-93 பிற்பகல் 3 மணி. ஆரம்பம் 01-08-1993 எடிசன் அக்கடமி, யாழ். இந்து அருகில், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (26700)

ஆண்டு 4இற்கு புலமைப்பரிசில் (1994) பரீட்சைக்கு அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படவுள்ளது. ஆரம்பம்: 31-07-93 சனி முற்பகல் 8-30 மணி. மாதாந்தம் இரண்டு பரீட்சைகள். அடுத்த பரீட்சை 7-8-93 சனி முற்பகல் 8-00, முற்பகல் 11-00. பதிவு செய்யவும் புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26727)

### புலமைப் பரிசில் பரீட்சை

Bond கல்வி நிறுவனத்தால் ஒவ்வொரு ஞாயிறும் வெளிவிடப்படும் ஆண்டு - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரிப் பயிற்சி வினாத்தாள்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, மகிமலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம் S. K. சாமி- நெல்லியடி, பவிஸ் கு- சாவகச்சேரி ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம். (6866)

வருடா வருடம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுத் தரும் நிறுவனத்தால் வாரந்தோறும் வெளியிடப்படும் புலமைப் பரிசில் வினாத்தாள் 1 - 8 - 93 ஞாயிறு வெளியிடப்படும். விடையளித்துத் தந்தால் திருத்திக் கொடுக்கப்படும். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (26712)

### மிருதங்கம்

மிருதங்க முழு வேலையும் ஒரு கிழமைக்குள் நல்ல முறையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். கோவிந்தபிள்ளை விஜயகுமார், பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (26689)

---

வட்டுக்கோட்டைத் தொகுதி
தெங்கு பனம் பொருள் உற்பத்தி
விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்
சங்கானை

## பதவி வெற்றிடங்கள்

1. பதவி: இலிகிதர்

தகைமைகள்:

கூ. வே. ஆணைக்குழுவின் 14ஆவது சம்பளத் திட்டத்தில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 5 திறமைச் சித்திகள்.

சம்பள அளவுத் திட்டம்:

302/13க்கு அமைவான புதிய சம்பளத் திட்டம்.

2. பதவி: கிளை முகாமையாளர் தரம்-III

தகைமைகள்:

கூ. வே. ஆணைக்குழுவில் 14ஆவது சம்பளத்திட்டத்தில் 2வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது க. பொ. த (சாதாரணம்) கணிதம், தமிழ் உட்பட 6 பாடங்களில் சித்தி;

சம்பள அளவுத் திட்டம்:

302/13க்கு அமைவான புதிய சம்பளத்திட்டம்.

குறிப்பு:

மேற்படி சங்கத்தில் கடமையாற்றும் பணியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பங்கள் யாவும் 15-8-1993 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், வட்டு. தொகுதி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
வட்டு. தொகுதி தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்,
சங்கானை.

(26728)

---

### O/L MATHS

Distinction பெறுபேறுடைய 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் ஆரம்ப அறிவிலிருந்து கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோசேந்திரா வீதி, சுண்டுக்குளி. [6386]

---

**BECON**
**கல்வி நிறுவனம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

**A/L - 94**
பொருளியல் I
மீட்டல்

பொருளியல் II
பாடத்திட்டம்,
வரவு-செலவுத் திட்டம்

ஆரம்பம்:
1—8—1993
ஞாயிறு 11-00

**A/L - 95**
உற்பத்தி-
இயல்தகவு வளையி

ஆரம்பம்:
1 - 8 - 1993
ஞாயிறு 1-00

(சி-5635)

---

**BECON**
**கல்வி நிறுவனம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 94**
(1 வருட வகுப்பு)
சனி, ஞாயிறு
வகுப்புகள்

பொருளியல் —
S. வரதராஜன்
11-00 — 12-00
அளவையியல் —
S.S. மனோகரன்
8-00 — 9-00
கணக்கியல் —
சௌந்தி
10-00 — 11-00
வர்த்தகம் —
பசில்
12-00 — 1-00
தமிழ் —
திருமதி மீரா
10-00 — 11-00
இந்து நாகரிகம் —
பாலா
7-00 — 8-00
புவியியல் —
ஜோசப்
9-00 — 10-00
கிறிஸ்தவம் —
நிரஞ்சன்
7-00 — 8-00

ஆரம்பம்:
01-08-93
ஞாயிறு

---

## 41ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 22 | 21 |
| — | — |
| 09 | 06 |
| — | — |
| 1934 | 1993 |

அமரர்
## செல்லம்மா சண்முகம்

"தோன்றின் புகழொடு தோன்றுக என்னும்
ஆற்றமெங் வாங்கிற் கமைந்த உதாரணம்"

எமது இல்லத்தில் இன்று (31-07-93) சனிக்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

ச. குகநேசன் (ஆனந்தி)
(6613)

---

## நெஞ்சம் நெக்குருகும் 2ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் V. M. கணபதிப்பிள்ளை

(V. M. K. நகை மாளிகை உரிமையாளர், சாவகச்சேரி)

அன்னையின் மடியில்: 23 — 4 — 1913
ஆண்டவன் அடியில்: 31 — 7 — 1991

திதி: 7 — 8 — 1993

வானத்து முழுமதியாய்
வாசமலர் தானதுவாய்
தேனொத்த மொழிகொண்டு
தேசமெல்லாம் பேர்படைத்து
தானம் தவமெல்லாம்
தயவுடனே நனியாற்றிக்
கானம் பொழிந்துநின்ற
கண்ணியனே கலையழகே
வானத் திறைவனவன்
வண்மைமிகு திருவருளில்
மேனிலைவாய் நீயமர
மேதினியில் வழுத்துகிறோம்,

— V. M. K. குடும்பத்தினர்.

(6864)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கடற்பாதை கொலைப்பாதை!

ஸ்ரீலங்காப் படையினர் மற்றும் ஒரு முறை கிளாலிக் கடலில் தமது கொலை வெறியாட்டத்தை நடத்தி இருக்கின்றனர். தங்கள் முக்கிய தேவைகளுக்காக வெளிமாவட்டங்களுக்குச் சென்றுவிட்டு யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்த பயணிகளை சுட்டும், குத்தியும் கோரத்தனமாகக் கொன்றிருக்கிறார்கள். வழமை போலவே தமது இனவெறியையும் காட்டுமிராண்டித் தனத்தையும் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள்.

கடந்த கால் நூற்றாண்டு காலமாக தமிழர் இன ஒழிப்பு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருவது வரலாறாகி விட்டது. எனவே வியாழக்கிழமை கிளாலிப் படுகொலைகளை தனியாகப் பிரித்துப் பார்க்க முடியாது.

தமிழர் இன ஒழிப்பையும், அவர்கள் வாழ்க்கைச் சீர்குலைவையும் இலக்குகளாகக் கொண்டே ஸ்ரீலங்கா அரசுகள் தொடர்ந்து இயங்கி வருகின்றன. அந்த அரசுகளின் கருவிகளே படையினர். தமிழர்களைக் கொல்வதற்கும், சித்திரவதை செய்வதற்கும் அவர்களின் உடைமைகளை அழிப்பதற்கும், வாழ்க்கையைச் சீர்குலைப்பதற்கும் என்றே படையினர் சம்பளம் கொடுத்து அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்றே கூறலாம். ஆகையால் படையினர் கிளாலிப் படுகொலைகளைப் போன்ற கொடுமைகளில் எவ்வாறு ஈடுபடாதிருப்பர்?

கடந்த ஜனவரி மாதம் இரண்டாம் திகதி படையினர் கிளாலிக் கடலில் நடத்திய பயங்கர வெறியாட்டம் 1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை போலவே உலகப் பிரசித்தம் பெற்றது. அறுபது தமிழர்களின் உயிர்களை கீரை கிள்ளுவது போல கொய்துவிட்டு 'கப் சிப்' என இருந்தனர் கடற்படையினர். அரசும் அது குறித்து பெரிதாக எதுவும் அலட்டிக் கொண்டதில்லை. தாம் தடை செய்த கடற்பரப்பின் ஊடாகச் செல்வோருக்கு உயிர்ப்பறிப்பே தண்டனை என்ற வகையில் நடந்து கொண்டது!

கிளாலிக் கடல் மூலம் பயணம் செய்து யாழ்ப்பாணம் வந்த அங்கிலிக்கன் ஆயர் கென்னத் பெர்னாண்டோ மீது வழக்குத் தொடர வேண்டும் என்று அரசியல்வாதிகள் கோரியதும்—

அவர் தடை உத்தரவை மீறிப் பயணம் செய்தார் என்பதற்கு சாட்சியம் — ஆதாரம் — இல்லை என்று கூறி அதிகாரிகள் சமாளித்ததும் மறந்துவிடக் கூடியவை அல்ல!

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கான சகல பாதைகளும், படையினரால் — அரசினால் — மூடப்பட்டுவிட்டன. அவற்றினூடே ஒருவர் ஒரு தடவை கூடப் போய்வர முடியாது. அவ்வளவு பயங்கரமானது அதனால்தான் குடாநாட்டு மக்களுக்கு கிளாலிப் பயணம் (ஒப்பீட்டளவில்) இலகுவாக இருக்கிறது. அதனைவிட வேறு பாதை இல்லை என்பதால் அவர்களுக்கு மாற்று மார்க்கமும் இல்லை. இது அரசுக்கு நன்றாகத் தெரியும்.

அதாவது கிளாலியை தடை செய்யப்பட்ட பிரதேசமாக அரசு அறிவித்ததே தமிழரை இலகுவில் கொல்லும் நோக்கத்துடனேயே என்பதில் சந்தேகம் இல்லை. தடை விதித்தால் என்ன விதிக்காவிட்டால் என்ன குடாநாட்டுத் தமிழர்கள் கிளாலியைப் பயன்படுத்துவார்கள். தடையை மீறினார்கள் என்று கூறி அவர்களைத் தாராளமாகக் கொல்வது இலகுவாக்கம் என்று படையினர்— அரசினர்— திட்டமிட்டே செயற்படுகின்றனர்.

குடாநாட்டு மக்களுக்கு கிளாலிக் கடற்பாதை கொலைப் பாதையாகவே அரசால் வகுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்க அரசின் கருவிகளான படையினர் நடத்தும் கொலைகளைத் தடுத்து நிறுத்த முடியுமா?

தமிழர்களின் போக்குவரத்து உரிமை பறிக்கப்பட்டது குறித்து சர்வதேச மட்டத்தில் அழுத்தம் கொடுத்து அதனை நீக்க வற்புறுத்துவதால் மட்டுமே ஓரளவேனும் பயன் கிடைக்கும்.

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று சனிக்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்.

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் தெய்வீக இசை அரங்கில் திரு. எஸ். பாலசிங்கம் இன்னிசைக் கச்சேரி மாலை 6மணி முதல்.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ முத்துவிநாயகர் கோயிலில் 5-15—6 15 ''அரங்கேற்றம்'' எனும் பொருளில் ஞானதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில் மாலை 5-30—6-30 பிரசங்க பூஷணம் ந சிவசண்முகமூர்த்தி ''தாருகாசுரன் வதம்'' எனும் பொருளில் கந்த புராண இசைப் பேருரை

★ பிற்பகல் 2 3 மணிக்கு திரு. மு. ஆறுமுகம் ''வள்ளலுக்கு ஒரு வள்ளி'' எனும் பொருளில் சமயச் சொற்பொழிவு.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி - நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00—4-30 மணிக்கு கந்தபுராணபடனம்.

(ச-111-126)

## இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கத்தின் 30 ஆவது ஆண்டு வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர். (உ-3]

o o o

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள சிறுவர் பாடசாலை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் மூளாய் சிறுவர் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் அனுசரணையுடன் சிறுவர் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1 30 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறும். (இ-161)

## கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 31

வேலணை உதவி அரச அதிபர் பிரிவில் தொழுநோய், புற்றுநோய், காசநோய் ஆகியவற்றுக்கான சித்திரை, வைகாசி, ஆனிமாத கொடுப்பனவுகள் தற்சமயம் வழங்கப்படுகின்றன.

இந்தக் கொடுப்பனவுகளை யாழ். பிரதம தபாலகத்தில் இயங்கும் புங்குடுதீவு, வேலணை தபாலகங்களில் பெறுமாறு வேலணை உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (த-3)

## மனித உரிமை இயக்கங்கள் சீற்றம்!

கொழும்பு, ஜூலை 31

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொலவுக்கு துறைமுக அதிகார சபையின் பிரதித் தலைவர் பதவியை அரசு வழங்கிய செயல், மனித உரிமை இயக்கங்களின் சீற்றத்துக்கு இலக்காகியுள்ளது. (த-எ)

## மிதிவெடியில் சிக்கி பார்வை இழந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 31

மண்வெட்டியால் நிலத்தைக் கொத்தியபோது நிலத்தின் கீழ் இருந்த மிதிவெடி வெடித்ததில் முதியவர் ஒருவர் பார்வை இழந்தார்.

மணலாறு அலம்பில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

அவ்விடத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை குமாரசாமி (65 வயது) என்பவரே காயம் அடைந்தவர் ஆவார் காயம் அடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-...)

# சகல மக்களும் ஆயுதமேந்தினால் 10 மாதத்தில் மண்ணை மீட்கலாம்

## புலிகள் மூத்த உறுப்பினர் தேவர் கூறுகிறார்

வலிகாமம் மேற்கு, ஜூலை 31

''1983ஆம் ஆண்டில் மிகத் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்ட இன்றைய இந்த ஆயுதப் போராட்டத்தில் சுமார் 5,400 போராளிகள் வீர மரணத்தைத் தழுவியுள்ளனர் உலக நாடுகள் ஆச்சரியம் அடையும் அளவிற்கு எமது போராட்டம் முன்னேறியுள்ளது. 10 ஆண்டுகளில் 5,400 பேர் இந்த நிலைமையை ஏற்படுத்தியுள்ளனர் என்றால் இன்று இங்குள்ள எமது 8 லட்சம் மக்களும் ஆயுதம் ஏந்திப் போராடினால் 10 மாதங்களில் எமது மண்ணை மீட்டுச் சுதந்திரமாக வாழலாம்.''

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் சங்கானை நிகரவைரவர் ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்ற 83 ஜூலை படுகொலையின் 10ஆம் ஆண்டு நிறைவு நாள் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார். சங்கானை ப.நோ.கூ.ச தலைவர் திரு. வை செந்தில்நாதன் தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தின் ஆரம்பத்தில் 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 போராளிகளும் புலிகளும் 53 ஈகைச் சுடர்கள் திரு. தேவர் அண்ணாவினால் ஏற்றி வைக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து வலிகாமம் மகளிர் பேரவைப் பொறுப்பாளர் செல்வி சந்திரிகாவினால் உறுதியின் உறைவிட நினைவுச் சின்னத்துக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட அரசியல் துறை நடுவப் பணியகத்தைச் சேர்ந்த திரு. தங்கன், வலிகாமம் மகளிர் பேரவைப் பொறுப்பாளர் செல்வி சந்திரிகா ஆகியோர் உட்பட இன்னும் பலர் கருத்துரை வழங்கினார்கள். (ச-175)

## மன்னாரில் ரொக்கட் வீச்சு

மன்னார் மாவட்டத்தின் முள்ளிக்குளம் கடற்கரைப் பகுதியில் கடந்தவியாழன் சிறிலங்கா வான்படையின் புக்காரா விமானமொன்று ரொக்கட் தாக்குதலை நடத்தியுள்ளது.

அன்று காலை 10-30 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

புக்காரா விமானத்திலிருந்து ஆறுக்கும் அதிகமான ரொக்கட்டுகள் ஏவப்பட்டன. இவற்றினால் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரிய வரவில்லை. (இ-162)

## யாழ். பல்கலைக்கு வந்த உபகரணங்கள் தெற்கிற்கு

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். பல்கலைக்கழகத்துக்கு பிரிட்டிஷ் உதவித் திட்டத்தின் கீழ் கிடைக்கவிருந்த பல கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள் தென் இலங்கை பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றன

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு பல்கலைக்கழகங்களில் கல்வி நெறியைத் தொடரும் மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அந்த பல்கலைக்கழகங்களுக்கு அந்த உதவியை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசு சிபாரிசு செய்ததாகவும்—

பிரிட்டிஷ் அரசு அந்த சிபாரிசை ஏற்று அந்த உதவியை தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு வழங்க முடிவு செய்துள்ளதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

இந்த உதவித்திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்க சம்மதம் அளித்த உபகரணங்களை யாழ்ப்பாணத்துக்கே வழங்க வேண்டுமென்பதில் பிரிட்டிஷ் அரச இலங்கை அரசை வற்புறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-3)

## பிரேமா நினைவாக 'பிரித்' விஜே, ரணிலுக்கு அழைப்பு

கொழும்பு, ஜூலை 31

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா நினைவாக இன்று இரவு முழுவதும் நடத்தப்படவுள்ள பிரித் ஓதும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும்படி ஜனாதிபதி விஜேதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மற்றும் முக்கிய ஆளும்கட்சிப் பிரமுகர்களையும் அழைப்பது என்று திருமதி ஹேமா பிரேமதாஸா தீர்மானித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சி திரு. பிரேமதாஸாவிற்கு சொந்தமான சுசரித்த வாசஸ்தலத்தில் நடைபெறவிருக்கிறது. நாளை மறுநாள் பிக்குகளுக்கு தானம் வழங்கப்படும்.

திருமதி பிரேமதாஸா இம் மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி மாளிகையில் இருந்து வெளியேறி சுசரித்த மாவத்தையில் வசித்து வருகின்றார். அரசினால் வழங்கப்பட்டுள்ள ஸ்டான்மோர் கிரெஸன்ட் வாசஸ்தலத்துக்கு திருமதி ஹேமா செல்லவில்லை.

இதேவேளை அடுத்த மாத முதல் வாரத்தில் தமது அரசியல் பிரவேசம் பற்றி ஹேமா அறிவிப்பார் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## கொழும்பில் மீண்டும் கசினோ விளையாட்டு

கொழும்பு, ஜூலை 31


மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவினால் தடைசெய்யப்பட்ட கசினோ விளையாட்டை கொழும்பில் மீண்டும் நடத்த அனுமதி வழங்கப்படக்கூடும் என்ற ஹேஷ்யம் கொழும்பு வட்டாரங்களில் அடிபடுகின்றது

கசினோ விளையாட்டு தொடர்பான சர்வதேசப் பிரமுகர்கள் சிலர் அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்ததைத் தொடர்ந்து இந்த ஊகம் நிலவுகின்றது.

பிரேமதாஸா அரசினால் நாடுகடத்தப்பட்ட ஜோசிம் என்பவரின் நெருங்கிய கூட்டாளி ஒருவரும் கொழும்பு வந்தவர்களில் ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

1991 முற்பகுதியில் கசினோ விளையாட்டை பிரேமதாஸா அரசு தடைசெய்தது. (த-எ)

உ



## தனயர்க் கருள்வாய்!

உலகைப் படைத்தும் உடலைப் படைத்தும்
உயிரைப் புகுத்தி — உயர்வான
உணர்வைக் கொடுத்தும் உள்ளத்தலத்தில்
உயிரிற் கலந்தும் — உறைவோனே
நன்னைத் துறந்தும் அமரைப் புரிந்தும்
உரிமைத் தலத்தைப் — பெறவேதம்
உறவைத் துறந்தும் சமரிற் புகுந்தும்
உயிரைக் கொடுக்கும் — இளையோரின்
நன்னைப் புரிந்துன் அருளைப் பொழிந்தும்
இடரைக் களைந்தும் — அருளாயோ
தமிழைத் தொடுத்து அழகைக் கொடுக்கும்
அடியார் அகங்கள் — அணிவோனே
தலைமைத் தலத்தில் உயர்வுற் றிலங்கும்
நல்லைத் தலத்தில் — அமர்வோனே
தளர்வுற் றிளையா மனதைக் கொடுத்துன்
தனயர்க் கருள்வாய் — முருகோனே!

— திருமதி கு. குமாரசுவாமி.

## நாளை

வடமராட்சி கருக்கெழுத்து கழகம் நடத்தும் சுருக்கெழுத்து தட்டச்சு கல்விக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 45 தொடக்கம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

சுருக்கெழுத்து, தட்டச்சுத் துறை சார்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், தொழில் புரிவோர் அனைவரும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

o o o

ஓய்வு பெறும் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை உப அதிபர் திருமதி கனகமணி கந்தசாமிக்கு சேவை நலம் பாராட்டு விழா ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு ஏழாலை மேற்கு முத்தமிழ் மன்றத்தில் நடைபெறும். (க-45)

o o o

'ஆரம்ப'சுகாதார பராமரிப்பு' பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய மருந்தக மண்டபத்தில் நடைபெறும்.

அகதிகள் புனர்வாழ்வுக்கழக ஆதரவுடன் நடைபெறும் இக் கருத்தரங்கில் யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த டாக்டர் சி. என். நச்சினார்க்கினியன் கருத்துரை வழங்குவார். (ச-18)

o o o

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் வழங்கும் முழுநிலா நாள் அறிவியல் அரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

அரங்கில் ''சமகால உலக விவகாரங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம்'', ''தலைமைத்துவமும் அதனை வளர்த்துக் கொள்ளலும்'' ஆகிய விடயங்கள் பற்றி முறையே யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் திரு. சமாதிலிங்கம் சத்தியசீலன், திரு. கனகசபை சிவானந்தமூர்த்தி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (க)

## ரூ. 28க்கு சீனி தாராளமாக விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 31

கூட்டுறவுச் சங்கக் கடைகளில் சீனிக்குரிய பங்கீட்டு முறை நீக்கப்பட்டுள்ளது.

கிலோ 28 ரூபாவுக்கு கூட்டுறவுக் கடைகளில் வேண்டிய அளவு சீனி விநியோகிக்கப்படுகிறது. (இ-154)

## 'குமண' புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 31

கொழும்பு செல்லும் அரச ஊழியர் மற்றும் மதகுருமார்கள் உட்பட 89 பேருடன் 'குமண' கப்பல் நேற்று திருகோணமலைக்கு புறப்பட்டது.

இக்கப்பலில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், யாழ் ஆயர் அதிவண. தாமஸ் சௌந்தரநாயகம் ஆகியோரும் பயணமாகினர்.

கொழும்பில் இருந்து சிகிச்சை பெற்றுத்திரும்புவோரை திருமலையில் வைத்து ஏற்றிக்கொண்டு 'குமண' கப்பல் நாளை மீண்டும் பருத்தித்துறைக்கு வந்து சேரும்.

கொழும்பில் சிகிச்சை பெறச் செல்வோரை ஏற்றிக் கொண்டு மீண்டும் நாளை மாலையே அது திருமலைக்குப் புறப்படும். (உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை நிலையம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 31 எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சி.ஈ. (உயர்தரப்) பரீட்சைக்காக கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தின் பரீட்சார்த்திகளை சாவகச்சேரி இந்துக்கல்லூரி மண்டப இலக்கம் மூன்றிலும்—

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலத்தைப் பரீட்சை நிலையமாகக் கொண்ட ஏனைய பரீட்சார்த்திகளை பளை மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலும்— தோற்றுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (இ-3)


# WANTED TEACHER
## ST. PATRICK'S COLLEGE, JAFFNA

A full - time teacher for Art - Years 6 to 11

Apply before 7, August 1993. Please quote Ref. No: 30793.

Applications after 7, August 1993 will not be entertained.

– RECTOR

(C/5542)



யா/ வயாவிளான்

## மத்திய மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கக்

# ★ கலைவிழா ★

இன்று நடைபெறவிருந்த மேற்படி விழா நாளை ஞாயிறு பிற்பகல் 6.30 மணிக்கு உரும்பராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறும்.

இசை, நடன நிகழ்ச்சிகள்

நாடகம்:

✶ அன்னப்பறவை ✶ புழுவாய் மரமாகி

✶ காலத்தின் தரிசனம் ★ மேலும் கீழும்

(6614) - அதிபர்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி கிறேஸ் கிருபை முத்தையா

திருமதி கிறேஸ் கிருபை முத்தையா காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற A. D. முத்தையாவின் அன்பு மனைவியும், துரைராஜா, திருமதி சாந்தா தேவதாசன், அற்புதராஜா, நேசராஜா (ஜேர்மனி), அருமைராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். நல்லடக்க ஆராதனை இன்று சனிக்கிழமை (31-07-93) பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, ஏழாலை தெற்கு சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்
திருமதி சாந்தா தேவதாசன்

'தோப்பு'
ஏழாலை தெற்கு,
சுன்னாகம். (26748)

## சுப்பிரமணியம் தியாகராசா

மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மீசாலை வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய சுப்பிரமணியம் தியாகராசா 30-07-93 காலையில் காலமானார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும், பரமநாதன், (ப.நோ.கூ.ச. சாவ. கிளை முகாமையாளர்), கருணாதேவி, கமலேஸ்வரி, பத்மநாதன், மகேஸ்வரன் (அமெரிக்கா), கமலராணி, கமலாம்பிகை, கலாநிதி, கணேஸ்வரன் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனலட்சுமி, மகேந்திரன் (நோர்வே), இராமநாதன், யோகநாதன், மனோகரி, பஞ்சராணி, தவஜோஜினி (நோர்வே), மகாலிங்கம், குமாரகுலம் (தபால் நிலையம் கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரசாமி, இராஜலட்சுமி, பவளம், சரஸ்வதி, அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மகேஸ்வரியின் மைத்துனரும், காலம் சென்ற கனகசுந்தரத்தின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 31-07-93 அன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்
சு. குமாரசாமி

மீசாலை வடக்கு,
மீசாலை. (26744)

## தற்பரானந்தன் முகுந்தன்

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் க. பொ. த. (உயர்தரம் - 1993 வகுப்பை சேர்ந்தவருமான தற்பரானந்தன் முகுந்தன் 30 - 7 - 93 இல் அகால மரணமானார்.

இவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் தற்பரானந்தன் தம்பதிகளின் மூத்த புதல்வனும் மயூரன், சுகந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நண்பகல் (31 - 7 - 93 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. தற்பரானந்தன்
(தந்தை)

வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.
(26749)

## மட்டக்களப்பில் புதிய பொலிஸ் நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31 மட்டக்களப்பு பேய்தாளையில் பொலிஸ்நிலையம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது.

கல்குடாவில் இருந்து பேய்தாளை வரையான 2 கிலோ மீற்றர் தூரத்தில் தற்சமயம் 4 பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் பொலிஸார் அப்பகுதியில் வீதிகளிலும், வீட்டு வளவுகளிலும் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளனர். (உ-3)

## வட்டுக்கோட்டை,...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தியில் பெருங்குழிகள் ஏற்பட்டன. அருகில் இருந்த இரு வீடுகள் நாசமாகின. பத்துப் பொதுமக்கள் காயமடைந்தனர்.

மாவடியில் தாக்குதல் நடத்திய ''சுப்பசொனிக்'' விமானங்கள் அதன் பின் சித்தன்கேணி அந்திரன் வாய்க்கால் தோட்டப் பகுதியில் இரு குண்டுகளை வீசின.

தோட்டத்தில் விழுந்து வெடித்த குண்டுகளினால் அப்பகுதியிலும் பாரிய கிடங்குகள் ஏற்பட்டன. பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியுடைய பயிர்கள் நாசமாகின, தோட்டவெளிக்குச் சற்றுத் தொலைவில் இருந்த வீடுகள் பல சிறிது சேதமடைந்தன. பொதுமக்கள் இருவர் காயமடைந்தனர்.

சற்று நேரம் கழித்து— மாலை 5-20 மணியளவில்— வந்த இரு ''புக்காரா'' விமானங்களும் சுப்பசொனிக் விமானங்கள் குண்டு வீசிய அதே இடங்களில் இரண்டு, இரண்டு குண்டுகளை வீசிச் சென்றன. அதனால் அப்பகுதிகளில் குழிகள் ஏற்பட்டன. சில வீடுகள் சேதமுற்றன.

சித்தன்கேணி அந்திரன் வாய்க்கால் பகுதிக்கு அருகே ஒழுங்கை ஒன்றில் வீசப்பட்ட குண்டு ஒன்று வெடிக்காமல் ஒழுங்கையில் புதையுண்டு கிடந்தது.

மாவடியில் இடம்பெற்ற குண்டுவீச்சில் சிக்கி— மூக்கினால் இரத்தம் வழிந்த நிலையில் — யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட பாடசாலை மாணவர் ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த தற்பரானந்தன் முகுந்தன் (வயது 20) என்ற மாணவரே பலியானவராவார். இவர் கல்லூரியின் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப் பிரிவைச் சேர்ந்தவர்.

குண்டு வீச்சில் சிக்கியவர்களைக் காப்பாற்றுவதற்காகச் சென்ற சமயம், மீண்டும் வந்து குண்டு வீசிய புக்காராவின் தாக்குதலுக்கு இவர் இலக்காகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (உ-3-9-15)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான — 17 வயதுக்குட்பட்டோர்— கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று காலை 8.30 மணி முதல் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இந்த ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி மோதும் பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. என். சோமசுந்தரம் பங்கு பற்றுவார். [உ-20]

○ ○ ○

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நிறுவுநர் சுழல் கேடயத்திற்காக கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்தும் — 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — 6 ஓவர் கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும்.

14 கழக அணிகள் பங்கு பற்றும் இச் சுற்றுப் போட்டி நாளையும் தொடர்ந்து நடைபெறும். [உ-2...]

○ ○ ○

கொழும்புத்துறை ... சனசமூக நிலையத்தின் ... ஆவது ஆண்டு நி... விழாவை முன்னிட்டு ... தப்பட்டு வரும் மென்ப... கிரிக்கெட் சுற்றுப் போ... யின் ஆட்டங்கள் இ... காலை 9 மணி முதல் கொ... புத்துறை இந்து மகா... யாலய மைதானத்... தொடர்ந்து இடம்பெறும். [உ-1...]

○ ○ ○

காந்தரூபன் சனசமூக நிலையத்தினர் சுன்னா... சிங்கமாப்பாணர் மைதா... தில் நடத்திவரும் — 9 ... கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இ... மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ 3.30 மணி:- திரும... நட்சத்திரங்கள் எதிர் ம... கம் ஜொலி போய்ஸ்.

★ 4.30 மணி :- மரி... காடு ஞானமுருகன் '... எதிர் சுழிபுரம் சத்தியா ... (உ-2...)

## அரசியல் மற்றும் தார்மீக ரீதியாக ராவுக்கு தோல்வி

### ஜெயலலிதா கூறுகிறார்

இந்திரா காங்கிரஸ் அரசு மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் முடிவு, நரசிம்மராவுக்கு அரசியல் மற்றும் தார்மீக ரீதியான தோல்வி ஆகும்.

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அஜித்சிங் தலைமையிலான ஜனதாதள் கட்சியில் பிளவை ஏற்படுத்... மூலம், இந்திரா கா... கொள்கைப் பிடிப்... மற்ற அரசியல் கட்... மதை வெளிக்காட்... என்றும் அவர் நேற்... யிட்ட அறிக்கையில் ... துள்ளார்.

நரசிம்மராவ் அர... மத்தியில் செல்வாக்கு ... விட்டது என்றும் ... ளார்.

## பொலீஸ் நிலையத்தில் நின்ற லொறியில் ஆயுதங்க...

கொழும்பு, ஜூலை 31 கடந்த இரு வருடங்களாக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றின் மேல் தட்டில் ஏராளமான ஆயுதங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்ததை தாம் கண்டு பிடித்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

ஏ.கே. 47 ரைபிள்கள், கிரனேட்டுகள், வெடிமருந்... தோட்டாக்கள் என்ப... தாங்கள் கண்டுபிடி... தாகவும்—

கூட்டுப்படைத் ... யகக் குண்டு வெடிப்... வம் தொடர்பான ... நபரான வரதன் தப்ப... தற்கு பயன்படுத்தப்... கலாம் என்று கருதி... படி லொறியைத் ... தடுத்து வைத்திருந்த... பொலீஸார் தெரி... ளர்.

## 599 வேங்கைகள்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஆகாய, கடல், வெளித் தாக்குதலை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் புலிகள் நடத்தினர்.

இந்த வீரம் செறிந்த போரில் 599 புலி வீரர்களும் புலிகளுக்கு தோள்கொடுத்து நின்ற துணைப்படை வீரர்கள் மூவரும் தாயக விடுதலைக்காக தம்முயிர் ஈந்தனர். அந்த வரலாற்று நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிறைவு நாளே இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

## 7 அப்பாவிச்...

(1 ஆம் பக்கத் தொ...

உபசரித்து செஞ்சி... சங்க சர்வதேசக் குழு... டம் ஒப்படைத்தனர்.

விடுதலைப் புலி... முல்லை மாவட்டத் ... பாண்டியன் இவர்... செஞ்சிலுவைச் சங்க... தேசக் குழு பிரதிநிதி ... எலிஸபெத் கொம்... ஒப்படைத்தார். (...


உ

நீர்வேலி அருள்மிகு

## செல்லக் கதிர்காம சுவாமி கோயில்

# "ரதோற்சவ விழா"



01—08—1993 ஞாயிற்றுக்கிழமை மிக விமரிசையாக நடைபெறும்.

வசந்த மண்டப பூசை காலை 5-30 மணி

ரத ஆரோகணம் காலை 6-30 மணி

ரத அவரோகணம் பகம் 12-30மணி

தேர்த்திருவிழாவை முன்னிட்டு

★ கைதடி பா. பஞ்சமூர்த்தி குழுவினர்

★ அளவெட்டி பத்மநாதன் குழுவினர்

★ அளவெட்டி உதயசங்கர் குழுவினர்

விசேட மேள, நாதஸ்வரக் கச்சேரிகள் இடம்பெறும்.

அனைவரும் வருக! முருகன் திருவருள் பெறுக

உபயகாரர்
கிருஷ்ணபிள்ளை குடும்பத்தினர்
ஆனந்தன் குடும்பத்தினர்

நீர்வேலி. (26740)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 31-07-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org